# நன்றி சொல்லி பாடுவோம்

நன்றி சொல்லி பாடுவோம்
நல்லவரை வாழ்த்துவோம்
வல்லவர் ஆகுவோம் வழமை காணுவோம்
காலங்கள் நம் கையில்
காயங்கள் கரைகையில் (நன்றி )

1
மண்ணிலே விண்ணகத்தை மலரச்
செய்யும் மனிதனாய்
கண்ணிலே தீப் பிளம்பைக் கொண்டவர்
தாம் கிறீஸ்துவே
ஆணவத்தை அடக்கவே அலை
அலையாய் செல்லுவோம்
காலங்கள் நம் கையில்
காயங்கள் கரைகையில் (நன்றி )

2
சாதிகள் பேதங்கள் சந்தி
தோறும் மோதல்கள்
சரித்திர நாயகன் சாட்சியத்தால் சரியுமே
சொல்லடிக்கும் சூழலை செயல்
வடிவில் மாற்றுவோம்
காலங்கள் நம் கையில்
காயங்கள் கரைகையில் (நன்றி )